# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின்அவசரக்கூட்டம் 2017 ஏப்ரல் (24.04.2017) முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது .கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின் வருமாறு,

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் .29727/2016/இ3 நாள்:21.04.2017–ல் தெரிவித்துள்ளபடி, நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்படுத்தப்படும் பல்வேறு பணிகளில் மத்திய மாநில அரசு துறைகளிடம் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், நகராட்சியால் செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர்/ பாதாள சாக்கடை பணிகளை விரைந்து நடைமுறைப்படுத்தி , இதனால் ஏற்படும் செலவுகளை குறைக்கவும் , குறிப்பாக பேரிடம் ஏற்படும் காலங்களில் பிற துறைகளிடம் அனுமதி பெற்று அத்தியாவசிய பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதால், பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய செலவினங்கள், கால தாமதங்களை தவிர்க்கவும், நகராட்சி பகுதிக்குட்பட்ட NHAI , தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள், ஊராட்சி சாலைகள் மற்றும் இதர மாவட்ட சாலைகளை நகராட்சி வசம் எடுத்துக்கொள்ளும் பொருட்டு, இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் சாலைகளை நகராட்சி வசம் எடுத்துக்கொள்ள மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| வ.எண் | சாலையின் விவரம் |
|---|---|
| 1 | **மாநில நெடுஞ்சாலை**<br>குளச்சல் வி.கே.பி. பள்ளிக்கூடம் முதல் துறைமுகம் வரை |
| 2 | கொட்டில்பாடு முதல் சைமன்காலனி பாலம் வரை |
| 3 | **மாவட்ட முக்கிய சாலைகள்**<br>காந்தி சந்திப்பு முதல் களிமார் பாலம் வரை |
| 4 | வெள்ளியாகுளம் முதல் புளியமூட்டுவிளை வரை |

ந.க.எண்.707/2017/இ1

**தீர்மானம் எண்.1642, அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.2

இந்நகராட்சி ஆணையர் அறையில் அடிப்படை வசதிகள் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்: 1635 நாள்: 30.03.2017 –ன் படி மன்ற அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 18.04.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட<br>0.08 % குறைவு |
| 2. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட<br>0.12 % அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட 0.08 % குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.592/2017/இ1

**தீர்மானம் எண்.1643 அஙகீகரிக்கப்பட்டது.**

ஆணையாளர்
குளச்சல் நகராட்சி

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 28.04.2017 அன்று முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானஙகள் பின்வருமாறு,

**பொருள் எண்.1**

குளச்சல் நகராட்சி 2016–17–ம் ஆண்டுக்கான திருத்திய வரவு செலவு அறிக்கை மற்றும் 2017–18–ம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவு அறிக்கை தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.பி1/308/2016

**தீர்மானம் எண்.1644 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN 75K 6256-ன் சாவி மற்றும் ஒலி எழுப்பான் ஆகியவை பழுதடைந்த காரணத்தால், வாகனத்தை இயஙக இயலாத நிலை ஏற்பட்டது. எனவே அலுவலகப் பணிகளில் மேற்படி வாகனத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு, பழுதடைந்த சாவிக்கு மாற்றாக புதிய சாவி வாஙகுதல் மற்றும் ஒலி எழுப்பானை சரி செய்தல் ஆகிய பணிகளை நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ் மேற்கொண்டு, அதற்கான செலவினம் ரூ.2415/– ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகி உள்ளதற்கு மன்ற அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ1/7057–1/2011

**தீர்மானம் எண்.1645 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சியில் கட்டிட வரைபடம் அனுமதி கோரி வரும் விண்ணப்பஙகள் மற்றும் இதர விண்ணப்பஙகள் மீது திருத்திய கட்டணம் வசூல் செய்யும் பொருட்டு, இந்நகர் மன்றத் தீர்மானம் எண்.1621 நாள்: 22.02.2017 –ன் படி அஙகீகாரம் செய்யப்பட்டுள்ளதின் அடிப்படையில் கட்டண விபரஙகளை பொதுமக்கள் அறியும் வண்ணம் 04.04.2017–ம் தேதிய தினமணி நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் ரூ.16,600/– வழஙகப்பட்டு Express Publication (Madurai) Limited நிறுவனத்தில் இருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழஙகுவதற்கு அஙகீகாரம் வேண்டப்படுகிறது. ந.க.எண்.TPI/811/2011

**தீர்மானம் எண்.1646 அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.4

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை சிறப்பு திட்ட துணை விதிகள் 2016 தொடர்பாக பத்திரிக்கையின் மூலம் பிரசுரம் செய்தது மற்றும் அறிவிப்பு நோட்டீஸ் அச்சடிக்கப்பட்ட வகையில் கீழ்காணும் விவரப்படியான தொகை வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | மக்கள் குரல் நாளிதழ் (துணை விதி) | 21.03.2017 | ரூ.48000/– |
| 2 | தினத்தந்தி நாளிதழ் (துணை விதி) | 21.03.2017 | ரூ.28400/– |
| 3 | மாலை மலர் நாளிதழ் (விழிப்புணர்வு பிரசுரம்) | 21.03.2017 | ரூ.4080/– |
| 4 | விழிப்புணர்வு அறிவிப்பு நோட்டீஸ் அச்சடிக்கப்பட்டது | 21.03.2017 | ரூ.5200/– |
| | | மொத்தம் | ரூ.85680/– |

ந.க.எண்.எச்1/362–1/2017

**தீர்மானம் எண்.1647 அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.5

இந்நகராட்சிக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்களை 2017–18 முதல் 2019–2020 வரை மூன்றாண்டுகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தை தினமணி பத்திரிக்கையில் 04.03.2017–ல் விளம்பரம் செய்த வகையில் ரூ.22576–ம், 21.03.2017–ல் விளம்பரம் செய்த வகையில் ரூ.18077–ம் பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றம் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.அ1/11062/2015

**தீர்மானம் எண்.1648 அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.6

இந்நகராட்சிக்குட்பட்ட டாக்டர் அம்பேத்கார் வணிக வளாகத்தில் அமைந்துள்ள கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்திக்கு 28.02.2017–ல் உரிமம் முடிவடைந்துள்ளதால் மூன்றாண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு செய்யவும், கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்.41,42,43,54,55,56 ஆகிய கடைகளுக்கு 30.04.2017–ல் உரிமம் முடிவடைவதால் மேலும் 31.05.2017–ல் உரிமம் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு செய்யவும் வாடகை தொகையில் 15% உயர்வு செய்யவும் மன்றம் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| வ.எண் | வரி விதிப்பு எண் | உரிமைதாரர் பெயர் | உரிமம் முடியும் நாள் | உரிமம் நீட்டிப்பு செய்யும் காலம் | தற்போதைய வாடகை | 15% உயர்வு செய்த வாடகை | உயர்வு செய்யப்பட்ட பின்னர் வாடகை தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2007063 | கன்னியாகுமரி மாவட்ட பால் கூட்டுறவு பால் உற்பத்தி | 28.02.2017 | 01.03.2020 | 317 | 48 | 365 |
| 2 | 2008001 | எம்.மேத்யூ | 30.04.2017 | 01.05.2020 | 1349 | 202 | 1551 |
| 3 | 2008002 | எம்.மேத்யூ | 30.04.2017 | 01.05.2020 | 1342 | 201 | 1543 |
| 4 | 2008003 | எம்.மேத்யூ | 30.04.2017 | 01.05.2020 | 1349 | 202 | 1551 |
| 5 | 2008004 | எம்.மேத்யூ | 30.04.2017 | 01.05.2020 | 1349 | 202 | 1551 |
| 6 | 2008005 | எம்.மேத்யூ | 30.04.2017 | 01.05.2020 | 1342 | 201 | 1543 |
| 7 | 2008006 | எம்.மேத்யூ | 30.04.2017 | 01.05.2020 | 1349 | 202 | 1551 |
| 8 | 20011006 | மோகன்லால் பாபு | 3.05.2017 | 01.06.2020 | 1754 | 263 | 2017 |

ந.க.எண்.அ1/2035/2015

**தீர்மானம் எண்.1649 அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.7

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் வணிக வளாகத்தில், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி 2014–15–ன் கீழ், கட்டப்பட்டுள்ள நவீன மீன் சந்தையில் பொது நலனை கருத்தில் கொண்டு, கூடுதலாக மின் விளக்கு வசதிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000/–க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ1/749–1/2017

**தீர்மானம் எண்.1650 அனுமதிக்கப்பட்டது.**

ஆணையாளர்
குளச்சல் நகராட்சி